வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 6.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

புதுடெல்லி பாரத் மண்டபத்தில் 3 நாட்கள் நடைபெற உள்ள அஷ்டலட்சமி மகா திருவிழாவை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை தொடக்கி வைத்தார்.

ஊடகங்களில் தவறான தகவல்களை பரப்புவதை கட்டுப்படுத்த மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் 12 ஆவது சர்வதேச ஆவணப்பட – குறும்பட திருவிழா இன்று தொடங்கியது.

புதுச்சேரி அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கர்மயோகி பாரத் மற்றும் திறன் மேம்பாட்டு ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

*முர்மு*

ஒரு மனிதனின் அனைத்து வளர்ச்சிக்கும் கல்வி மட்டுமே ஒரே வழி என்றும், வேலை வாய்ப்பை பெறுவது மட்டுமே கல்வியின் குறிக்கோளாக இருக்க கூடாது என்றும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். 5 நாள் அரசு முறைப் பயணமாக தனது சொந்த மாநிலமான ஒடிசா சென்றுள்ள அவர் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தான் பயின்ற மையூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள உபர்பேடாவில் அரசு ஆரம்ப பள்ளி மாணவர்களிடையே உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார். குடியரசு தலைவராக பதவி ஏற்ற பின்னர் முதல் முறையாக தனது சொந்த ஊருக்கு சென்ற அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் நாளை நடைபெற உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இருக்கும் குடியரசு தலைவர் ராய்ரங்பூர் பழங்குடி

ஆராய்ச்சி மையம், சிறப்பு வசதிகள் கொண்ட மருத்துவமனை உள்ளிட்ட திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

*அஷ்டலட்சுமி*

வடகிழக்கு இந்தியாவின் வளர்ந்த கலாச்சார அம்சங்களை முன்னிலைப் படுத்தும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் இன்று பாரத் மண்டபத்தில் அஷ்டலட்சுமி மகா திருவிழாவை தொடக்கி வைத்தார். இந்த விழா இன்று முதல் 8-ஆம் தேதி வரை 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது. இந்த விழாவில் 320 விவசாயிகள் மற்றும் 250-க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள், கைத்தறி, வேளாண் பொருட்கள், கிராமிய சந்தைகள் உள்ளிட்டவை குறித்து கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அம்சங்கள் குறித்து தொழில் நுட்ப அமர்வுகள் நடைபெற உள்ளன. தேசிய அளவில் வடகிழக்கு இந்தியாவின் வளமான கைத்தறி மற்றும் கைவினை பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் வடிவமைப்பு மாநாடு மற்றும் ஆடை அலங்கார காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*அம்பேத்கர்-புதுடெல்லி*

இந்திய அரசியலமைப்பின் தலைமை சிற்பியான பாரத ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 69ஆவது நினைவு தினத்தை குறிக்கும் வகையில் இன்று மஹாபரிநிர்வான் தினம், அனுசரிக்கப்படுகிறது.

புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியத் தலைவர்கள் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதுகுறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் சமத்துவம் மற்றும் மனித மாண்பிற்கான டாக்டர் அம்பேத்கரின் அயராத போராட்டம் பல தலைமுறைகளுக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக புகழாரம் சூட்டி உள்ளார்.

*நாடாளுமன்றம்*

மாநிலங்களவையில் ரூபாய் நோட்டு கட்டு கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக குடியரசு துணைத் தலைவரும், அவைத் தலைவருமான திரு ஜெகதீப் தன்கர் தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுவதை யாரும் ஆட்சேபிக்க கூடாது என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக் கொண்டார். இந்த விவகாரம் தொடர்பாக மாநிலங்களவை நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி மற்றும் பிற காங்கிரஸ் தலைவர்கள் மீதான பிஜேபி மக்களவை உறுப்பினர் திரு ரிஷிகாந்த் துபேயின் குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பான அமளியால் மக்களவையும் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

*ஸ்மார்ட் இண்டியா*

ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தானின் 7-ஆவது பதிப்பு வரும் 11-ஆம் தேதி நாடு முழுவதும் 51 மையங்களில் தொடங்க உள்ளது. இதன் துவக்க நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கலந்து கொண்டு காணொளி மூலம் உரையாற்ற உள்ளார். ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் மூலம் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சில அழுத்தமான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு தளத்தை மாணவர்களுக்கு வழங்குகிறது. இதில் 54 அமைச்சகங்கள், துறைகள், மாநில அரசுகள், பொது துறை நிறுவனங்கள் மற்றும் தொழில் துறைகள் 250-க்கும் மேற்பட்ட அறிக்கைகளை சமர்பித்துள்ளன. இதில் தேசிய முக்கியத் துவம் வாய்ந்த மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் சுகாதாரம், தளவாடங்கள், நவீன தொழில்நுட்பங்கள். பாரம்பரியம், கலாச்சாரம், நிலைத்தன்மை, விவசாயம், கல்வி, திறன் மேம்பாடு, பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட 17 கருப்பொருட்களை உள்ளடக்கியது குறிப்பிடத் தக்கது.

*எல் முருகன்*

ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் மற்றும் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தக் கூடிய போலியான மற்றும் தவறான தகவல்களை பரப்புவதை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் இன்று எழுத்து பூர்வமாக அளித்த பதிலில் இதுதொடர்பான பல்வேறு ஊடகத் தளங்களில் வரும் போலி

செய்திகளுக்கு தீர்வு காண அரசு சட்டப்பூர்வ வழிமுறைகளை கொண்டு வந்துள்ளதாகவும் இதற்காக அமைச்சகத்தின் கீழ் உண்மை சரிபார்ப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். மேலும் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் அலைவரிசைகளை மேம்படுத்தும் விதமாக D2M ஒளிபரப்பு தொழில் நுட்பத்திற்காக பிரச்சார் பாரதியும் IIT கான்பூருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் டாக்டர் எல் முருகன் அந்த பதிலில் தெரிவித்துள்ளார்.

குறும்பட திருவிழா

புதுச்சேரியில் 12 ஆவது சர்வதேச ஆவணப்பட – குறும்பட திருவிழா இன்று தொடங்கி 3 நாட்கள் நடைபெற உள்ளது. புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவினை சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொடக்கி வைத்தார். புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பொறுப்பு வகிக்கும் முனைவர் தரணிகரசு, பிரபல திரைப்பட இயக்குநரும்,தயாரிப்பாளருமான திரு ஆனந்த் பட்வர்த்தன் ஆகியோரும் கலந்து கொண்டஇத்திரைப்பட விழாவில், உலகம் முழுவதிலும் இருந்து 36 குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

(வாய்ஸ்)

புதுச்சேரி திரைப்பட இயக்கம், இந்திய தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளோடு இணைந்து புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் மின்னனு ஊடகம் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஒப்பந்தம்

புதுச்சேரி அரசு ஊழியர்களின் திறன் மேம்பாட்டினை வளர்க்கவும் பயிற்சி அளிக்கவும் கர்மயோகி பாரத் மற்றும் திறன் மேம்பாட்டு ஆணையத்துடன் புதுச்சேரி அரசு இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்த கையெழுத்திடும் நிகழ்ச்சியில் அரசு செயலர் திரு பங்கஜ் குமார் ஜா, மற்றும் கர்மயோகி பாரத் அமைப்பின் செயல் அலுவலர் திருமதி லலிதா லட்சுமி

ஆகியோர் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சியில் உரையாற்றிய துணை நிலை ஆளுநர், கர்மயோகி தளம் வெறும் கற்றல் கருவி மட்டுமல்லாமல் மாற்றத்திற்கான களம் என கூறினார். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு அசோக்பாபு, தலைமைச் செயலர் சரத்சவ்கான் மற்றும் அரசு செயலர் திரு உதயக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

*அம்பேத்கர்*

சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கரின் நினைவு தினம் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி, சட்டப்பேரவை எதிரே உள்ள பாரதி பூங்காவில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அரசு சார்பில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. ஜெயகுமார், திரு. சாய் ஜெ சரவணன் குமார், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அங்காளன், திரு. அசோக் பாபு, திரு. பாஸ்கர் (எ) தட்சிணாமூர்த்தி, திரு. கல்யாண சுந்தரம், திரு. லட்சுமி காந்தன், திரு. பிரகாஷ் குமார், திரு. கே.எஸ்.பி. ரமேஷ் மற்றும் பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து கடற்கரை சாலையில் அமைந்துள்ள சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

*காரைக்கால்*

காரைக்காலில் சமூக நலத்துறை மூலம் அங்குள்ள அரசு, அரசு உதவிப் பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு மாவட்ட ஆட்சியரின், மாணாக்கரின் குரல் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட புகார் பெட்டி அளிக்கப்பட்டது. முதல் தவணையாக 10 கல்வி நிறுவனங்களுக்கு இத்தகைய புகார் பெட்டி வழங்கும் நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அதிகாரி திருமதி விஜய மோகனா, ஆட்சியரின் செயலர் திரு பொன் பாஸ்கரன், நாட்டு நலப் பணித்திட்ட மாவட்ட

ஒருங்கிணைப்பாளர் திரு தாமோதரன், சமூக நலத்துறை உதவி இயக்குநர் திரு ராஜேந்திரன் மற்றும் நல அதிகாரி திரு சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி அமைக்கப்பட்டுள்ள இந்த புகார் பெட்டியில் மாணவ-மாணவிகள் போதை பொருட்கள் குறித்த புகார்கள் மட்டுமல்லாமல் மற்ற புகார்களையும், கொடுக்க இந்த பெட்டியை பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பேரிடர் பாதிப்பு*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட புதுச்சேரி,காரைக்கால் மற்றும் ஏனாம் உள்ளிட்ட பகுதிகள் பெஞ்சல் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதிகளை இயற்கை பேரிடர் பாதிப்பு பகுதிகளாக அறிவித்து புதுச்சேரி அரசின் வருவாய் துறை சிறப்பு செயலரும், மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் ஆணை வெளியிட்டுள்ளார்.

*வானிலை*

இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் இன்று முதல் 10-ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

புதுடெல்லி பாரத் மண்டபத்தில் 3 நாட்கள் நடைபெற உள்ள அஷ்டலட்சமி மகா திருவிழாவை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை தொடக்கி வைத்தார்.

ஊடகங்களில் தவறான தகவல்களை பரப்புவதை கட்டுப்படுத்த மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் 12 ஆவது சர்வதேச ஆவணப்பட – குறும்பட திருவிழா இன்று தொடங்கியது.

புதுச்சேரி அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கர்மயோகி பாரத் மற்றும் திறன் மேம்பாட்டு ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

-----------------------------